முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1415

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.08.2023**, திங்கட்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா
அறமாக வாழுகின்ற தேசிகா
மாறுதலை செய்தே தீருவேன் என
மக்களுக்கு மகாசக்தியாக வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 29 ம் நாள், 14.08.2023 திங்கட்கிழமை)
வரமென உன் கொள்கை வளர
வையகம் தானாக மாற்றம் பெறும்
3. மாற்றம் தரவந்த மகா சக்தி நீதான்
மக்களை போற்றி மீட்க
மகத்துவம் கூட்டி ஆற்றல்பட
தர்மம் வளர்க்கின்ற அவதார ஞானியும்
4. யோகியும் என் சக்தியும் நீதான்
உன் கொள்கை உலகம் ஏற்கப்படவே
உண்மையான ஞான ஆட்சிகள்
உலகமெங்கும் மலருமப்பா
5. அப்பனே அற்புதத்தை உமக்கு ஆக்கமாக ஆறுமுகன்
அனுதினம் வழங்கி வருகின்றேன்
வருகவே உன் அவதாரம்
வையகத்தார்க்கு அறியப்பட்டால் போதும்
6. போதுமப்பா அனைவரும் தானாக
புண்ணியவழி இதுவொன்றே நாடி பிரணவக்குடிலில் சரணடைந்து
சரவணச்சுடரை வணங்கி நாளும்
சற்குரு உன் அருள் தயவோடு

7. தயவோடு உலகோர் தண்டாயுதன் என் காட்சிப் பெற்று
இந்த தரணியில் தக்கபடி ஞானவான்களாக ஞானிகளாகவே
தவராஜன் உன் தயவோடு மாற்றங்கண்டு
தரணிக்கு அற்புதத்தை நிகழ்த்துவர்
8. ஆகவே உலகோர் அரங்கன் வழிவரத்தான் வேண்டும்
அந்த மாற்றத்தை ஆறுமுகன் யான் நடத்தி
ஜெகமெல்லாம் ஞான ஆட்சிக்காலமும்
சித்திமிகுந்த ஞானசித்தர் காலத்தையும் உருவாக்கி அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–